# பாகிஸ்தான் பாதையில் சிலோன்!

REGD. No. M. 6311 PHONE No. 55630

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

சென்னை: ஜூனியர் 30௳ புதன் (14—7—54)
வெளியூர்: ஜூனியர் 31௳ வியாழன் (15—7—54)

மலர்: 2
இதழ்: 26

# 'பழம் விழுந்தாலும் சரி, எறியும் கல் எவர் மண்டையை உடைத்தாலும் சரி'

## 'ஆந்திரரும் தமிழரும் அடித்துக்கொண்டால் மருந்திட அவர் வரமாட்டார்!

### சித்தூர் போராட்டத்தில் ம.பொ.சி.-யின் நிலை இதுதான்!

## சித்தூர் போராட்டம் பற்றி அண்ணாதுரை பேச்சின் மேல் விவரம்

"சித்தூர் தமிழ்ப் பகுதிகள் தமிழகத்துடன் இணைக்கப்பட வேண்டுமென்பதற்காக, போரிடவேண்டியதெல்லாம் டெல்லியுடன்தானே அன்றி காமராஜருடனல்ல; சித்தூர் தமிழ்ப் பகுதிகளை ஆந்திரத்துடன் இணைத்தது பண்டித நேருவின் ஆட்சியே தவிர பிரகாசத்தின் ஆட்சி அல்ல; எனவே, எய்தவனிருக்க அம்பை நோவது அநியாயமானது,"

என்று சித்தூர் தமிழர் பிரச்னை குறித்து தி.மு.கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள், பொதட்டூர்பேட்டை மாநாட்டில் குறிப்பிட்டார்கள். அவரது சொற்பொழிவின் ஒரு பகுதி நேற்று தரப்பட்டிருந்தது; பிற்பகுதி இங்கே தரப்படுகிறது:—

நாம் ஆந்திராவுடன், 'சித்தூரைத் தா'வென்று போர் தொடுத்தால், ஆந்திரம் என்ன செய்யும்? டில்லி ஆதிபத்தியமும் என்ன செய்யும்?

### திருவாங்கூர் காட்சி

இன்று, திருவாங்கூர் நிலைகளைப் பாருங்களேன்—திரு-கொச்சியில் உள்ள தமிழர்கள், தமிழகத்துடன் இணைய வேண்டும் எனக் கிளர்ச்சி செய்கிறார்கள்; அவர்கள்மீது அடக்குமுறை அம்புகளை ஏவுகிறது திரு—கொச்சி சர்க்கார்! சென்னை காங்கிரசும், போராட்டத்தை அங்குள்ள தமிழர் காங்கிரசார்தான் நடத்துகிறார்கள் என்றபோதிலும், ஆதரிக்கவில்லை; ஒரு தீர்மானம்கூட நிறைவேற்றவில்லை.

'அதற்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை' என்று, சென்னை அரசும், மத்திய அரசும் வாய் மூடிக்கொண்டிருக்கின்றன.

இதே நிலைதானே, இங்கே நாம், ஆந்திர அரசுடன் போர் செய்வதால் ஏற்படும்?

ஆந்திர முதல்வரான பிரகாசம் என்ன, 'தமிழர்களே! சித்தூரை உடனே எடுத்துக் கொள்ளுங்கள்! என்று எழுதியா கொடுப்பார்? அவரால் அது முடியுமா?

### விநாயகம் —தெலுங்கர்!

இந்தப் பகுதிகளில் 25 ஆண்டுகட்கு முன் உருவான நிலைகளின் விளைவு, இன்று, தமிழர்களிடையேகூட சிலர் தங்களைத் தெலுங்கர்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். தோழர் விநாயகம் கூட 30 ஆண்டுகட்குமுன் விநாயகம் ('ரெட்டியார்') தெலுங்கர் என்றே பதிவு செய்யப்பட்டிருக்கிறார்.

30 ஆண்டுகட்கு முன் இருந்துவந்த நிலைக்கு நாம் பொறுப்பாளியாக முடியாது. அன்றிருந்த தலைவர்கள் வேறு பல பிரச்சினைகளிலே ஈடுபடுத்தப்பட்டிருந்ததினால், தமிழர்களில் பலர் ஆந்திரர் எனப் பதிவு செய்யப்பட்டதை தடுக்க முடியாமற்போய்விட்டது.

### உறங்கும் நேரத்தில்!

வீட்டுக்காரன் தூங்குகிற நேரத்தில் கள்ளன் பொருள்களைத் திருடிச் செல்கிறான்; பொருள்கள் திருடு போனதற்குக் காரணம், வீட்டுக்காரன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான் என்பதுதான் காரணமே அன்றி, வீட்டுக்காரனுக்கு பொருள்கள் திருடு போகவேண்டுமென்ற ஆசை இருந்ததாகவோ அல்லது, திருடனைப் பிடித்துப் பொருள்களை மீட்கத் துணிவு இல்லாமலிருந்தது என்பதோ அல்ல.

### விழித்தான்!

நான் நேற்று மாலை இங்கிருந்து இரண்டு மைல் தூரம் சென்றபோது அங்கிருந்த ஆடு மேய்க்கும் சிறுவர்கள் சிலரைக் கண்டேன்; அவர்களிலே ஒருவனை அழைத்து, 'நீ தமிழனா, தெலுங்கனா?' என்று கேட்டேன். அவனுக்கு இப்படி ஒரு பிரச்னை இருப்பதாகவே தெரியவில்லை! விழித்தான்!

### ஓட்டல் உரையாடல்

திருத்தணி கிளர்ச்சியின் போது, நானும் தோழர் விநாயகமும், கனகம்மாசத்திரம் எனும் ஊரில் சாப்பிடுவதற்காக ஒரு ஹோட்டலில் நுழைந்தோம்.

அங்கிருந்த ஹோட்டல்காரரை, 'கனகம்மாசத்திரம் தமிழகத்துடன் இருக்க வேண்டுமா? ஆந்திரத்துடன் இருக்க வேண்டுமா?—என்று கேட்டேன். அவர், ஆந்திரத்துடன்தான் இருக்க வேண்டும்,' என்றார்; உடனே, பக்கத்திலே சாப்பிட்டுக் கொண்டிருந்த யாரோ ஒருவர், 'அது எப்படி முடியும்? கனகம்மா சத்திரம் தமிழகத்துடன்தான் இருக்க வேண்டும்,' என்று சொன்னார்.

இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால்—பத்து பேர்கள் வந்து போகும் பொது மக்கள் தொடர்புடைய ஒரு ஓட்டலில் நிலவுகிற அபிப்பிராயமே இப்படி முரண்பட்டதாய்—குழப்பமுடையதாய் இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டத்தான்.

பொதுமக்கள் முதலில் பிரச்சினையை நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார்களா என்பது மிக முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டும்

பிரச்னை இங்குள்ள மக்களுக்குத் தெளிவாகப் புரியவில்லை, புரிந்திருந்தால் ம.பொ.சி.—யாருக்கு இங்கு இடமிருக்காது.

சித்தூர் பிரச்சினையைப் புரிந்துகொள்வதற்காகக் கூட்டப்பட்டிருக்கும் மாநாடு என்றுகூடச் சொல்லலாம், இந்த மாநாட்டை!

### டில்லிக்குத் தெரிவிக்க வேண்டும்

இந்தப் பிரச்சினை தீர, நாம் போராட்டம் நடத்த வேண்டுமானால், முதலில், இங்குள்ள தமிழர்களையும், ஆந்திரர்களையும் கலந்து ஆலோசிக்க வேண்டும். சித்தூர் தமிழ்ப் பகுதி, ஆந்திராவுடன் இணைந்து விட்டிருக்கிறது என்பதை, ஆந்திராவுக்குள் சொல்லிப் பயனில்லை; டில்லிக்குத் தெரியும்படிச் செய்ய வேண்டும்!

ஒரு மாத்தைப் பிளக்கும் போது காலும் பிசிறும் வருவது இயல்பு; அதைப் போலவே மாநிலங்கள் துண்டாடப்படும்போது எல்லைப் பிரச்சினைகள் எழுவது இயற்கையே! அந்தப் பிரச்னைகளை, திறந்த மனதுடன் இருசாராரும் புரிந்து கொள்ள வேண்டும். அத்துடன், எல்லைப் பிரச்னைகளுக்கும் பரிகாரம் காண, நியாய நோக்குடன் கூடிய ஒரு கமிஷன் அமைக்கப்பட்டு, விசாரணை செய்யவேண்டும்.

அதை விடுத்து இன்று ஆந்திரர்களிடையேயும், தமிழர்களிடையேயும், ஒருவருக்கொருவர் பகைத்துக் கொள்ளும் துவேஷப் பிரச்சாரம் செய்வது அறிவுடைமை அல்ல!

### வரமாட்டார்

தமிழர்களும்—ஆந்திரர்களும் அடித்துக் கொண்டால் அடிபட்ட தமிழர்களுக்கு மருந்திட ம. பொ. சி.யார் வருவாரா என்ன?

(4-ம் பக்கம் பார்க்க)

# இலங்கை உள்நாட்டு விவகாரத்தில் அமெரிக்கத் தலையீடு

## சீனு-சிலோன் அரிசி-ரப்பர் பண்டமாற்று ஏற்பாட்டிற்கு உலை!

## பிரதமர் கொத்தலாவலை அமெரிக்கா செல்வதின் இரகசியம்

### அமைச்சர் குழுவை விட்டு விலகிய சேனநாயகா தரும் தகவல்!

"நவ சீனாவிற்கும்—சிலோன் சர்க்காருக்கும் அரிசி - ரப்பர் பண்டமாற்று உடன்பாடு ஏற்கெனவே ஏற்பட்டு இருந்தது.

இப்பொழுது அந்தப் பண்ட மாற்று உடன்பாட்டை ஒழித்துக்கட்டுவதற்கு, சிலோன் பிரதமர் கொத்தலாவலை முன்வந்து இருக்கிறார்.

அதே நேரத்தில் பிரதமர் கொத்தலாவலை, அமெரிக்கக் குடியரசு தலைவரின் அழைப்பிற்கிணங்க அமெரிக்கா செல்லவும் தயாராகி விட்டார்.

ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ள கொத்தலாவலை சர்க்கார் மேற்கொண்டுள்ள முயற்சிக்கும், அவருடைய அமெரிக்க பிரயாணத்திற்கும், நெருங்கிய தொடர்பு இருக்கிறது.

சிலோன் சர்க்காரின் இப்போக்கு, 'உலகில் உருவாகி இருக்கிற இரு வல்லரசுகளின் அணி எதிலும் சேருவது இல்லை' என, சிலோன் கொண்டிருந்தக் கொள்கைக்கு மாறுபட்டதாகும்,"

என்று, கொத்தலாவலை அமைச்சர் குழுவிலிருந்து, சில காலத்துக்கு முன் விலகிய முன்னாள் வியாபார மந்திரி சேனநாயகா, பொதுக் கூட்டமொன்றில் குறிப்பிட்டார்.

உலக விவகாரத்தில் தன்னைப்போல் நினைப்புக் கொள்ளுமாறு செய்வதற்காக அமெரிக்கா செய்துவந்த முயற்சி, இப்பொழுது வெற்றி பெற்று விட்டது என, அவர் மேலும் கூறினார்.

அதற்காக, இலங்கையில் உற்பத்தியாகும் ரப்பரை வாங்க அமெரிக்கா மறுத்து வந்ததோடு, இலங்கை கேட்கும் பெறுவதைத் தரவும் மறுத்ததுடன் அமெரிக்கா நடந்து கொண்டது என, அவர் விளக்கினார்.

ஒப்பந்தப்படி சீனாவிலிருந்து 27000 டன் அரிசியை சிலோன் கொள்முதல் செய்ய வேண்டி இருந்ததை விலக்குச் செய்யுமாறு சீன சர்க்காருக்கு அறிவித்து விடும்படியும், அதே சமயத்தில் உடன்படிக்கையில் கண்டுள்ளபடி 50,000 டன் இலங்கை ரப்பரை கொள்முதல் செய்ய சீன சர்க்காரை வற்புறுத்த வேண்டுமெனவும் தமக்கு கொத்தலாவலை கட்டளையிட்டதாகவும், உடன்படிக்கை ஏற்பட்ட காலத்தில், தான், சீனா சென்றது, இலங்கை மக்களின் கட்டளையை நிறைவேற்றுவதற்காகவே என்றும், அக்கட்டளைக்கு மாறாக, பிரதமர் கொத்தலாவலையின் சொந்தக் கட்டளையை நிறைவேற்ற, இப்பொழுது, தன்னால், சீனா செல்ல முடியாது என்றும், விளக்கமாக உரைத்துவிட்டு, தனது வியாபார மந்திரி பதவியைத் துறந்துவிட்டதாக, சேனநாயகா, பொதுக்கூட்டத்தில் அறிவித்தார்.

பிரதமர் கொத்தலாவலையின் மனப்பான்மை, எவ்வாறு இருக்கிறது என்பதை, அண்மையில் கொழும்பு நகரில் நடைபெற்ற ஐந்து ஆசிய நாடுகளின் மாநாட்டில், அனைவரும் முறையாகத் தெரிந்தது.

பாகிஸ்தான் பிரதமர் போக்கிற்கும் பக்கபலமாக கொத்தலாவலை அப்பொழுது இருந்திருக்கிறார். இப்பொழுது, தனியும் ஐயத்திற்கிடமின்றி, பாகிஸ்தான் பாதையில் செல்ல, பிரதமர் கொத்தலாவலை, சிலோனைக் கொண்டு வந்துவிட்டார் என்ற உண்மை உறுதியாகி விட்டது.

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 14—7—54 புதன்

# மருத்துவரே! மருந்து தேடும்!!

★

காச நோய்க்காரர், 'கக்கக்' என விடாது இருமிக்கொண்டு இருக்கிறார், கேட்பவர் காதுகள் செவிடுபடும்படியாக!

அவர் மருந்து தரக் கிளம்புகிறார், வரட்டு இருமல் நோய் கண்டவர்களுக்கு!

இது கண்டு, வரட்டு இருமல்காரர்கள் என்ன கூறுவர்— 'மருத்துவரே, விடா இருமல்காரரே, எங்கள் பிணி நீக்க மருந்து கொடுப்பதற்கு முன், உங்கள் பிணிக்கு மருந்து தேடுங்கள்! உடனடியாகத் தேடுங்கள்!' என்று தானே கூறுவர்?

மொழிவழியில், மாநிலங்களைத் திருத்தி அமைத்தாக வேண்டும், என்ற சிறந்தக் கருத்தினை, விதையூன்றி, உயர் தருவாக, நாடு மக்களிடை வளர்த்து விட்டவர்கள், காங்கிரஸ் கட்சியினரே யாவர். அவ்வாறு வளர்த்தத் தலைவர்களில் பலரைக், காலம் களவாடிக்கொண்டு போய்விட்டது. விரல் விட்டு எண்ணத் தக்கவரே உள்ளனர், இன்று! அவர்களில் முக்கியமானவர், முதன்மையானவர் பண்டிதர் நேரு!

இந்தியத் துணைக் கண்டம், அரசியல் துறையில், ஆங்கில ஏகாதிபத்தியத் தொடர்பை அறுத்துக்கொண்டதும், காங்கிரஸ் தனது சிறந்த கோட்பாடுகளில் ஒன்றெனக் கொண்டிருந்த, மொழிவழி மாநில அமைப்புக் கொள்கையை, புறக்கணித்துப் பேசத் தொடங்கியது.

மொழி அடிப்படையில் மாநிலங்களைத் திருத்துவது, கூடாது—தீமை பயப்பது— என்று, காங்கிரஸ் கனிவுரையும், கனல் மொழியும் கக்கத் தொடங்கிவிட்டது. காங்கிரஸ் கட்சியிடம், இத்துறையில், திடீரெனக் காணப்பட்ட மாறுபாடும் — முரண்பாடும், பெரும்பான்மை காங்கிரஸ் கட்சியினரால் புரிந்து கொள்ள முடியாதப் புதிராகப் போய்விட்டது!

காங்கிரஸ் மேலிடம், அடுத்து அடுத்து பிறப்பிக்கும் கட்டளையும்—கண்டனமும், காங்கிரஸ் கட்சியினர் உள்ளங்களில் நிலைத்துப் போயிருக்கிற, மொழிவழி மாநில அமைப்பு விருப்பத்தை, விரட்டியடிக்கக்கூடியனவாக இல்லை. 'அக்கொள்கையை மனத்திற்குள் மறைத்து வைத்துக் கொள்ளுக; மாற்றுக் கட்சியினர் செவிபடுமாறு செப்பாதீர்' என, மேலிடம், காங்கிரஸ் கட்சியினருக்கு, வாய்ப்பூட்டும் போட்டிருந்தது!

நெஞ்சத்தை அடைத்துக் கொண்டிருக்கும் துக்கம், வெளியில் கொட்டி விரிக்கப் பட்டால்தானே, மன அமைதி ஏற்பட மார்க்கம் தோன்றும்? காங்கிரஸ் மேலிடத்தார் சிரமே தொய்யப்படுவதாக இருந்தாலும், இந்த மக்களின் பொதுப் பண்பை, விட்டொழிக்க, காங்கிரஸ் கட்சியினரால் மட்டும் எப்படி சாத்தியமாகும்?

அரசியலில்தான் கருத்து வேறுபாடு உடையவர்களே யல்லாது, காங்கிரஸ் கட்சியினர் என்ன பிறவாத் திருமேனிகளா? சாகா வரம் பெற்றவர்களா?-உள்ளத்தைப் புண்ணாக்கிக் கொண்டிருக்கும் கோரிக்கையை, பொதுமக்களிடம் வாய்விட்டுக் கூறி, வயிற்றெரிச்சலுக்கு மாற்றம் தேடாமல் இருக்க?

எனவே, தங்கள் தங்கள் மாநிலத்தின் நிலப்பரப்பு அளவில் சிறியதாக இருந்தாலும், பெரியதாக இருந்தாலும் அதைக் குறித்து பெருங்கவலை கொள்ளாமல், தங்கள் மொழி பேசும் மக்கள் வாழும் பகுதிகளை—தங்கள் மாநிலங்களைத் தொட்டுக் கொண்டுள்ள பகுதிகளை, தங்கள் தங்கள் மாநிலங்களுடன் இணைத்துக் கொள்ள வேண்டுமென விழைகின்றனர்—அவ்விருப்பத்தை ஒளிவு மறைவின்றி வெளியிடுகின்றனர்.

இதேபோன்று, பிறமொழி பேசும் மாநிலங்களில், சிறுபான்மை மொழி பேசும் மக்களாக உள்ளவர்களும், அடுத்துள்ள தம் தாய்மொழி பேசுவோர் பெருந்தொகையினராக உள்ள மாநிலங்களுடன், தாங்கள் வாழும் பகுதியையும் ஒட்டவைத்துக் கொள்ள ஒப்புகின்றனர்—ஒப்புதலை வெளிப்படுத்தியும் உள்ளனர்.

எனவே, மாநிலங்களை வெட்டியும், ஒட்டியும், மொழி அடிப்படையில் இந்தியத் துணைக் கண்டத்தைத் திருத்தி அமைப்பதுதான் முறை—நியாயம்—நாணயமும் கூட! இவ்வாறு செயலாற்றுவதில், சிக்கலுமில்லை —பெருந் தொல்லைகள் ஏற்படுமோ என அஞ்சவும் தேவை இல்லை!

ஆனல், காங்கிரஸ் மேலிடத்திற்கு, இது எட்டிப் பழமாக இருக்கிறது, சில நாட்களாக நெஞ்சத்தைத் திறந்து பேசாமல் ஏதேதோ குழறி வழிகிறது, மொழிவழி மாநில ஏற்பாட்டைக் கொலை செய்வதற்கு!

இப்பிரச்னையில், காங்கிரஸ் மேலிடத்தின் கருத்துக்கு மாறாக, காங்கிரஸ் கட்சியினரில் பல்லோர், கருத்துக் கொண்டுள்ளார்கள். மேலிடம் பூட்டிய வாய்ப்பூட்டை உடைத்தெறிந்து, அன்னார், தம் உள்ளத்தை, வெளியார் அறியக் காட்டி வருகிறார்கள்.

இதன் எதிரொலியாக, காங்கிரஸ் கோட்டைக்குள்ளாகவே குத்தும், வெட்டும் நாள் தவறாமல் நிகழ்ந்தவண்ணம் உள்ளன!

இந்தியத் துணைக் கண்டத்தின் பிரதமராக மட்டுமில்லாது, அகில இந்திய காங்கிரஸ் தலைவராகவுமுள்ள பண்டிதர், காங்கிரஸ் கட்சியினர், காங்கிரஸ் கூடாரத்திற்குள் செய்யும் குழப்பம் கண்டு சீறுகிறார்! கலப்பல, தம் இயல்புபடி, பதட்டமாகக் கூறுகிறார்.

அப்படிக் கூறினவற்றில் ஒன்றுதான், தங்கள் தங்கள் மாநிலங்களை 'பெரியதாக்கிக் கொள்ளவேண்டும்' என்று பல காங்கிரஸ் கட்சியினர் கருதுகின்றனர் என்பது!

மொழிவழி மாநில அமைப்பின், ஒரே மொழிவழி வந்த மக்கள் வசிக்கும் நிலப்பரப்பை, ஒரு மாநிலமாகத் திருத்தி அமைக்க வேண்டும் என்ற அடிப்படை கொள்கை தான் மூலமானதாகும். அப்படி அமைக்கப்பெறும்மாநிலத்தின் நிலப்பரப்பு பெரியதாக இருப்பதும், சிறிய அளவுடையதாக இருப்பதும் துணைப் பிரச்சினையே யல்லாது, மூலப் பிரச்சினை யாகாது.

குறிப்பிட்ட ஓர் மொழி பேசும் மக்களின் எண்ணிக்கையையும், அவர்கள் வாழ்ந்து வரும் நிலப் பரப்பையும் பொருத்திருக்கிறது, மொழிவழி அடிப்படையில் அமையும் ஒரு மாநிலத்தின் விரிவும்—குறுகலும்!

எனவே, மாநிலங்களைத் திருத்தி அமைப்பதில், மொழி மூலமாகக் கருதப்பட வேண்டும் என்பதுதான் முக்கியமே யல்லாது, நிலப்பரப்பு விரிந்திருப்பதும் குறுகியிருப்பதும் முக்கியமானதல்ல — மூலக் கோரிக்கைக்குப் புறம்பானதும் ஆகும். இந்த உண்மை பண்டிதருக்கும் தெரியும்; தெரிந்தும் பேசுகிறார், 'பெரிய நிலப்பரப்பு வேண்டும்' என்ற நோய் சிலரை, அதுவும் காங்கிரஸ் கட்சியினரைப் பிடித்திருப்பதாகப் பழிச்சொல் வீசுகிறார்!

அந்தப் 'பெரிய நிலப்பரப்பு'ப் பிணி, மொழிவழியில மாநிலங்கள் திருத்தி அமைக்கப்படல் வேண்டும் எனக் கோரும் காங்கிரஸ் சீடகோடிகளைப் பற்றி இருப்பதாகக், குருநாதர் பண்டிதர் குறைபடுகிறார். ஆனல், குருநாதருக்கோ, 'பெரிய நிலப்பரப்பு' என்ற நோய், அவருடைய குருதியிலேயே ஊறிப்போய் இருக்கிறது. இதை மறுக்க, அவர் துணியார்!

பெரிய நிலப் பரப்பான இந்தியா—ஒரு நாடு அல்ல; ஒரு துணைக் கண்டமாகும். ஒரு நாட்டு மக்கள் எனச் சொல்லத் தகுந்த நிலையில, இங்குள்ள மக்களின், இன வழி, மொழி வழி, கலாசார வழி ஒன்றுபட்டு இருக்கவில்லை. உண்ணல், உடுத்தல், உறவு கொள்ளல் ஆகிய நித்திய நடவடிக்கைகள் அனைத்திலும், ஒரு நாட்டு மக்கள் எனக் கொள்ளத்தக்க வகையில், இங்கு ஒற்றுமை காணப்படவில்லை.

வேறுபட்டும் — முரண்பட்டும் கிடக்கும் பழக்க வழக்கங்களைக் கொண்ட மக்களை 'இந்திய நேஷன்' எனக் கற்பனை செய்து கொண்டு, பண்டிதர், கனவுலகத்தில் சஞ்சரித்துக் கொண்டு இருக்கிறார். இவ்வரலாற்று உண்மையை பண்டிதர் அறியாதவரல்ல!

இப்படி பல்வேறுபட்ட மக்களை ஒரு 'நேஷன்' எனப் பண்டிதர் கூறிவருவதன் இரகசியம் என்ன? ஒரு துணைக் கண்டத்தை 'ஒரு நாடு' எனப் பண்டிதர் பீத்திக் கொள்வதின் மர்மம் என்ன?

பண்டிதரை 'பெரிய நிலப் பரப்பு'ப் பிணி பற்றாமல் இருந்திருக்குமானால், ஒரு துணைக் கண்டத்தை, 'ஒரு நாடு' என மதித்துக் கொண்டு, அந்த நாட்டின் பிரதமராக இருக்கத் துணிவாரா? 'பெரியது' என்ற நோய் பற்றினவர், தனக்குள்ள நோயின் தன்மையை அறிந்துகொள்ளாமல், காங்கிரஸ் சீடர்களுக்கு, அதுவும் மொழி அடிப்படையில் மாநிலங்களைத் திருத்தி அமைக்க விரும்பும் சீடர்களுக்கு, அந்த நோய் இருப்பதாகப் பண்டிதர் ஒப்பாரி வைத்தழுகிறார்!

தம் கண்ணில் இருக்கும் தூணை எடுக்கத் தெரியாதவர், பிறர் கண்களில் உள்ள துரும்பைக் கண்டு சீறுகிறார்—கொக்கரிக்கிறார்!

பண்டிதரின் நிலை தெரிந்த காங்கிரஸ் கட்சியினர், 'மருத்துவரே! நீர் முதலில் மருந்து தேடும்!' என்று தானே இயம்புவர்! இப்படி இயம்பிக் கொண்டுதான் இப்பொழுதும் உள்ளனர்!

அது, பண்டிதரின் காதில் விளக்கமாக விழ, மேலும் சில ஆண்டுக் காலம்—இல்லை—சில நாட்கள் செல்லும்! அவ்வளவுதான்!

# நம் தாய் மொழிப் பற்றுக்காகவே!

## 'தமிழாசிரியர்கள் 'நாத்திகர்' எனத் தூற்றப்படுகின்றனர்'

### காலஞ்சென்ற எம். எல். பிள்ளையும் பழிக்கப்பட்டார்!

''ஆரிய நாட்டினர்' என்ற பாரதி பாட்டின் வரிகளை நீக்க வேண்டும்'

### தமிழ் ஆசிரியர்கள் மாநாட்டில் டாக்டர் சிதம்பரநாதனர் கருத்துரை

சிதம்பரத்தில் 10—7—54-ல் நடைபெற்ற சென்னை மாநிலத் தமிழாசிரியர் இரண்டாவது மாநாட்டில் வரவேற்புக் குழுத் தலைவர் டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் வரவேற்புரை ஆற்றுகையில் குறிப்பிட்டதாவது :—

"தமிழாசிரியர்கள் திருக்குறளை நன்குகக் கற்று ஓதிப் பயிற்றுவித்து வருகிறார்கள்; ஆனதினுலேயே அவர்கள் கடவுள் நம்பிக்கையும், கடவுள் பற்றும் உடையவராக இருப்பர் என்பது சொல்லாமலே விளங்கும். திருவள்ளுவர் கூறிய

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"

என்ற திருக்குறள் தமிழாசிரியருக்கு என்றும் உணர்வு அளிக்கும் ஒரு பொன்மொழி என்பதில் ஐயமில்லை.

எனவே, கற்றுத் தேர்ந்ததன் நோக்கங்களில் தலையாயதாய இறை வணக்கம் அவர்களுடைய உடம்போடும், உயிரோடும் ஒட்டியது ஒன்றாகும். அவ்வாறு இருப்பவும், எங்கேயாவது, யாராவது ஒரு தமிழாசிரியர் கடவுள் நம்பிக்கைக் குறைவாக உடையவராகவோ, கடவுள் நம்பிக்கை அற்றவராகவோ காணப்பட்டால், அது காரணமாகத் தமிழாசிரியர் அனைவரும் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் என்பதுபோல கருதப்படுகின்ற கருத்து தக்கது அன்று. கடவுள் நம்பிக்கை இல்லாமல் வாழ்கின்ற ஆசிரியர்கள் ஏனைய துறைகளிலும் தான் காணப்படுகிறார்கள். ஆனல் பொதுவாக அவர்களைப்பற்றி எவரும் ஒன்றும் சொல்லிவிடாமல், தமிழாசிரியர் என்ற உடனேயே அவர் கடவுள் நம்பிக்கையின்கண்ணே ஐயுறுகிறார்கள். இதற்குச் சிறந்த காரணமாக இருக்கக் கூடியது தமிழாசிரியர்களின் தமிழ்ப் பற்றே ஆகும் போலும்!

தமிழாசிரியர்கள் சிலர், தமிழ் மொழியிலேயே தமிழ் மக்களின் வாழ்க்கைச் செயல் முறைகள் அமைய வேண்டும் என விரும்புகிறார்கள்; நடத்தியும் காட்டுகிறார்கள். பிறந்த நாள் தொட்டு நடைபெறுகின்ற சடங்குகளிலும், திருமணங்களிலும் கடவுள் வழிபாட்டிலேயும், நீத்தார் வழிபாட்டிலேயும் தமிழ் மொழி இடம் பெறவேண்டும் என்பது பல தமிழாசிரியர்கள் ஒப்ப முடிந்த கருத்து.

இக்கருத்து உடையோரைத் தவறுதலாகச் சிலவேளைகளில் சிலர் கடவுள் பற்று உடையவர் அல்லர் எனக் கூறிவிடுகிறார்கள்.

அது பொருந்தாது. உதாரணமாக, இந்தப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகத் தொண்டாற்றி வந்த திரு கா. சுப்பிரமணிய பிள்ளை எம். ஏ., எம்.எல் —தமிழர் தம் செயல்கள் அனைத்தும் 'தமிழ் மொழியில் இருத்தல்' வேண்டும்— என விரும்பினவர். அதனல் தில்லை நடராசர் கோயிலுக்கு அவர் சென்றாலும் வடமொழி வாயிலாக அர்ச்சனை செய்து கொள்ள விருப்பமில்லாதவராகத் தாம் கடைசிவரை வாழ்ந்து காட்டினர்கள்.

அதற்காக அவரை நாத்திகர் என்று சொல்கின்றவர்கள் கூட உண்டு. இதிலிருந்தே அறியப்படும், ஒருவனுடைய தமிழ்ப் பற்றே சில வேளைகளில் பிழை உணரப்பட்டு, அது காரணமாக ஏச்சுரையும் பேச்சுரையும் நிகழ்த்துவிக்க இடமாகின்றது என்பது.

நம்முடைய சமயத் தலைவர்
(4-ம் பக்கம் பார்க்க)

# உ. பி.-யில் புதிய பத்திரிகை காகிதத் தொழிற்சாலை

## ஐ. நா. நிபுணர் திட்டம் தந்திருக்கிறார்

## வடநாடு வாழ்வு பெறும் காட்சி!

உத்திர பிரதேசத்தில் சகரன்பூரில் பத்திரிகை காகிதத் தொழிற்சாலை ஒன்று சீக்கிரமே ஆரம்பிக்கப்படும் என்று தெரிகிறது.

ஐ. நா. நிபுணரான டாக்டர் ஹூபர் என்பவர் இத்தொழிற்சாலை பற்றி செய்துள்ள சிபார்சுகளை உ. பி. சர்க்கார் நடைமுறைக்குக் கொண்டுவர திட்டமிட்டுவிட்டார்களாம்.

தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டிய திட்டங்கள் தயாராகி விட்டன என்றும், இத்தொழிற்சாலையில் நாள் ஒன்றுக்கு 50 டன் பத்திரிகைக் காகிதம் உற்பத்தியாகும் என்றும் தெரிகிறது.

டேராடூன், தெஹ்ரிகார்வால் காடுகளிலிருந்து இத்தொழிற்சாலைக்குத் தேவையான மரங்கள் கொண்டு வரப்படும்.

இப்போது இந்தியாவில் இம்மாதிரி பத்திரிகைக் காகிதத் தொழிற்சாலை மத்திய பிரதேசத்தில் உள்ள நேபா மில் ஒன்று தான்!

உ. பி. சர்க்கார் ஆரம்பிக்க இருக்கும் தொழிற்சாலைக்கு மரங்களைக் கொண்டு வருவது மிகவும் கடினமாக இருக்கும்.

கங்கை, யமுனை நதிகளில் நீரோட்டத்தின் வேகம் அதிகமானபோல் அலைகளில் மரத்துண்டுகளை மிதக்கவிட இயலாது. அலக்னந்தா, ராம்கங்கா போன்ற நதிகளில் நீரோட்டத்தின் வேகம் மிதமாக இருக்கிறதென்றாலும், அலைகளின் இடையே உள்ள கற்பாறைகள், மரத்துண்டுகளை மிதந்துவராமல் தடை செய்யுமளவில் ஏராளமாக இருக்கின்றனவாம்!

சர்க்கார் இப்பாறைகளை டைனமெட் மூலம் உடைத்து இந்த நதிகளில் மரத் துண்டுகளை மிதக்கச் செய்ய ஏற்பாடு செய்யத் திட்டமிட்டிருக்கிறதாம்!

தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட இருக்கும் சகரன்பூருக்கு சரியான சாலைகள் இல்லாததால் அப்பிரதேசத்தில் சர்க்கார் ஒழுங்கான பெரிய சாலைகளை அமைக்க திட்டமிட்டிருக்கிறதாம்!

உ. பி. சர்க்கார் நிபுணர்கள் இக்காகிதத் தொழிற்சாலைக்கான திட்டங்களை விவரமாகப் பரிசீலனை செய்கின்றனர் என்று தெரிகிறது.

### ஒத்திவைப்பு

சட்ட விரோதமாகக் கூட்டம் நடத்தியதற்காக தண்டனை விதிக்கப்பட்டதை எதிர்த்து திருமதி ஜகன் செய்த அப்பீலில் தீர்ப்புக் கூறுவதை அப்பீல் கோர்ட் ஒத்திவைத்திருக்கிறது.

### ஊரடங்குச் சட்டம்

டெல்லி என்னும் வெளிவிய நகரி அருகே கலகக்காரர்கள் இரயில் ஒரு அப்பாக்கியுடன் தாக்குதல் நடத்தி, ஆறு பிரெஞ்சு அதிகாரிகளைக் கொன்றுவிட்டனராம். இதனை ஒட்டி அப்பிரதேசத்தில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டிருக்கிறது.

## சாதுக்களுக்கு சமூக சேவா பயிற்சி!

### சாதுக்களை கிராம சேவைக்கு அனுப்ப பீகாரில் முயற்சி!

பாட்னா நகரில் கங்கைக் கரை ஓரத்தில் சாதுக்களுக்கான சமூக சேவா பயிற்சி முகாம் ஒன்றை பீகார் செய்தி இலாகா அமைச்சர் சின்ஹா திறந்து வைத்தார்.

பத்து நாட்கள் இந்த முகாம் நடைபெறுமாம். சாதுக்கள் மட்டுமே இதில் சேர்த்துக் கொள்ளப்படுவார்களாம்.

பீகார் சாது மகாமண்டலும், பீகார் சர்க்காரின் சமூக கல்வி இலாகாவும் இப்பயிற்சி முகாமை நடத்துகின்றன.

இம் முகாமில் வைஷ்ணவ, கபீர்பந்தி, நானக்பந்தி, ஆர்ய சமாஜ் இவைகளைச் சேர்ந்த 30 சாதுக்கள் பயிற்சி பெறுகின்றனர். பயிற்சி முடிந்ததும் இவர்கள் நான்கு பேர் கொண்ட பிரிவுகளாகச் சென்று கிராமங்களில் சேவை செய்வார்கள் என்று தெரிகிறது.

சாதுக்கள் அனைவரும் வினோபாவே போன்று வாழ வேண்டுமென்றும், மக்களுக்கு அவர்கள் சேவை செய்ய வேண்டுமென்றும், பயிற்சி முகாமை ஆரம்பித்து வைக்கையில் அமைச்சர் சின்ஹா கூறினார்.

பீகார் சாது மகாமண்டலத்தைச் சேர்ந்த பிரமச்சாரி மங்களதேஜா இந்த ஆரம்ப விழாவிற்கு தலைமை வகித்தார்.

தேசிய புனர் அமைப்புக்கு நீண்ட காலமாகவே சாதுக்கள் உழைத்து வந்திருக்கிறார்கள். அதுபோலவே இப்போதும் தேசிய முன்னேற்றத்திற்கு சாதுக்கள் சமுதாயம் தியாகம் செய்ய வேண்டுமென்று தலைவர் கூறினார்.

சாதுக்களின் சேவையால், நாட்டிலே காணப்படும் ஊழல், வறுமை, அறியாமை இவைகளைப் போக்கி, மக்களின் கலாச்சார முன்னேற்றத்துக்குப் பாடுபட முடியுமென்று சாதுக்கள் பயிற்சி முகாமின் தலைவர் பிரமச்சாரி ஹரி நாராயண நந்த் கூறினார்.

### சுற்றுப் பயணம்

இந்தியாவின் உபஜனாதிபதி ராதாகிருஷ்ணன் செப்டம்பர் 15-ந் தேதியன்று வட, தென் அமெரிக்க நாடுகளில், சுற்றுப் பயணம் செய்யப் புறப்படுவார் என்று தெரிகிறது.

### போரம்

பாகிஸ்தானில் அடுத்த பஞ்சசீசன் முதல் பஞ்ச வாய்தா பேரம் ஆரம்பமாகலாம் என்று தெரிகிறது. நாடு பிரிக்கப்பட்ட பின்னர் பாகிஸ்தானில் பஞ்ச வாய்தா பேரம் தடை செய்யப்பட்டுள்ளது.

### பேசாதே!

ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் தலைவர் ஏ. ஜே. லூட்லி என்பவரை இரண்டு ஆண்டு காலத்துக்கு எந்தப் பொதுக் கூட்டத்திலும் பேசக்கூடாதென்று தடை விதிக்கப்பட்டிருக்கிறதாம்.

## சென்னை மாநிலத்திற்கு யூனியன் உதவி!

இந்திய சர்க்காரின் தேசியத் திட்டக் கடன் வசூலிலிருந்து சென்னை சர்க்காருக்கு 5 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்று தெரிகிறது.

சர்க்காரின் அபிவிருத்தி திட்டச் செலவு நடைமுதல் ஆண்டுக்கு 12 கோடி ரூபாய் ஆகுமென்று வரவு—செலவில் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்த செலவுகளுக்கு மத்திய சர்க்காரின் உதவியைக்கொண்டும் சென்னை சர்க்காரே கடன் பத்திரங்களை வெளியிடுவதின் மூலம் இதை சமாளிக்கலாம் என்று எதிர்பார்த்தனர் ஆனால் மத்திய சர்க்காரே தேசியத் திட்டக் கடன் பத்திரங்களை வெளியிட்டதால் சென்னை சர்க்கார் கடன் பத்திரங்களை வெளியிட முடியவில்லை.

மத்திய சர்க்காரே தேசியத் திட்டக் கடன் வசூலிலிருந்து 5 கோடி ரூபாய் சென்னை சர்க்காருக்கு ஒதுக்குவதாகவும், மேற்கொண்டு 5 கோடி ரூபாய் உதவி செய்வதாகவும் தெரிவித்திருக்கிறார்களாம். இதன் மூலம் சென்னை சர்க்காரின் திட்ட வேலைகள் தடையின்றி நடைபெறும் எனத் தெரிகிறது.

## உங்களுக்குத் தெரியுமா?

1. பாக்ரா — நங்கல் அணைத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுவரும் பாசனக் கால்வாய் முழுவதையும் ஒரே நாளில் கட்டி முடிப்பதென்றால், அந்த வேலையை நிறைவேற்றி வைக்க மொத்தம் எத்தனை தொழிலாளர்கள் வேண்டியிருக்கும்?
   (அ) சுமார் 3 கோடி
   (ஆ) சுமார் 5 கோடி
   (இ) சுமார் 7 கோடி
2. திருவாங்கூர்—கொச்சி ராஜ்யத்தில் நடைபெற்றுவரும் குடிசைத் தொழில்களுள் மிகப் பெரியது எது?
   (அ) கயிறு உற்பத்தி
   (ஆ) பனைவெல்ல உற்பத்தி
   (இ) தந்த வேலைப்பாடு
3. இந்தியாவில் விமானப் போக்குவரத்து முதல் முதலாக எப்பொழுது ஆரம்பமாயிற்று?
   (அ) 1923-ல்
   (ஆ) 1932-ல்
   (இ) 1947-ல்
4. வேலை வாய்ப்புகளை அபிவிருத்தி செய்யும் பொருட்டு, இந்தியாவின் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் அதிகப்படியாகச் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு?
   (அ) 100 கோடி ரூபாய்
   (ஆ) 175 கோடி ரூபாய்
   (இ) 200 கோடி ரூபாய்

விடைகள்:

1—(இ); 2—(அ); 3—(ஆ); 4—(ஆ).

# மேற்கு வங்க அகதிகளுக்கு ரூ. 32 கோடி!

## மூன்றாண்டு திட்டம் தயாராகிறது!

மேற்கு வங்க அகதிகளின் வாழ்வைப் புனரமைக்கவும், அவர்கள் முன்னேற்றத்துக்கு ஆவன செய்யவும் அடுத்த மூன்று ஆண்டுகளில் ரூ 32 கோடி உள்ள திட்டமொன்றை மத்திய சர்க்கார் நியமித்த குழு ஒன்று சிபார்சு செய்திருக்கிறது.

இக்குழுவில், இந்திய சர்க்கார் நிதி அமைச்சர், அகதிகள் புனரமைப்பு அமைச்சர், மேற்கு வங்க முதல் அமைச்சர் ஆகியோர் உறுப்பினர்களாவர்.

மேற்கு வங்க அகதிகள் இலாகா அமைச்சர் திருமதி ரேணுகாரே இக்குழுவின் வேலைகள் சுலபமாய் நிறைவேற ஒத்துழைத்தார் என்று தெரிகிறது.

இக்குழுவானது மேற்கு வங்க அகதிகள் புனரமைப்புக்கு இதுவரை அமுலாக்கப்பட்ட திட்டங்களில் உள்ள குறைபாடுகளை ஆராய்ந்ததுடன், மேற்கொண்டு நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்களைத் துரிதமாக்கும் முறைகள் பற்றியும் ஆராய்ந்ததாம்.

இக்குழுவினர் மேற்கு வங்க அகதிகளுக்கு 1954—55, 1955—56, 1956—57 ஆகிய மூன்றாண்டுகளுக்கும் ரூ. 32 கோடி திட்டமொன்றை மத்திய ராஜ்ய சர்க்கார்களுக்கு சிபார்சு செய்திருக்கிறது.

இதில் ரூ 9 கோடி மானியமாகவும் ரூ 23 கோடி கடனாகவும் மேற்கு வங்க அகதிகளுக்குத் தரப்படும் என்று தெரிகிறது.

மேற்கு வங்கத்தில் 26 லட்சம் அகதிகள் இருக்கின்றனர் என்று தெரிகிறது.

இத்திட்டத்தின்படி அகதிகள் முகாம்களைத் திருத்தி அமைப்பது, அகதிகளுக்கென்று நகரத்திலும், கிராமங்களிலும் கட்டப்பட்டிருக்கும் காலனிகளைத் திருத்தி அமைப்பது கல்வி வசதிகள், நிர்வாக சீர்திருத்தங்கள், தொழில் உதவிகள் முதலியன காணப்படுகிறது.

### மனச்சாட்சியுண்டா?

குவாடிமாலாவின் உண்மையான சர்க்காரை அமெரிக்கா தாக்கி அழித்துவிட்டதென்றும், இது, மனச்சாட்சியுள்ள எல்லா அமெரிக்கர்களுக்கும் தெரியுமென்றும், அறிக்கை ஒன்று 'நேஷனல் பிரசில் வெளியிடப்பட்டிருக்கிறது. இதில் குவாடிமாலாவின் முன்னாள் அமைச்சர்கள், எஞ்சினியர்கள் ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், 400-க்கு மேற்பட்டவர் கையெழுத்திட்டிருக்கின்றனர்.

### நன்மை செய்யுமா?

'வெள்ளை ஆஸ்திரேலியா கொள்கை'யை ஆஸ்திரேலியாவின் பாதுகாப்பிற்காக கடைப்பிடிக்க வேண்டியது அவசியம் என்று ஆஸ்திரேலிய எதிர்க்கட்சித் தலைவரும், தொழிற் கட்சியினருமான டாக்டர் ஹெர்பர்ட் ஈவாட் கூறினார்.

### புதிய யோசனை

சூயஸ் கால்வாய் பற்றி ஆங்கிலோ-எகிப்து பேச்சுக்கள் துவங்கிவிட்டன. பிரிட்டிஷார் வெளியேறிய பின்னர் சூயஸ் கால்வாயின் நிர்வாகம் தனிப்பட்ட கண்ட்ராக்டர்களிடம் விடப்பட வேண்டுமென்றும், எகிப்தின் தாக்குதல் ஏற்பட்டால் சூயஸ் தளம் மீண்டும் இராணுவமயமாக்கப்பட வேண்டுமென்றும் பிரிட்டன் புது யோசனைகளைக் கூறியுள்ளதாம்!

### அங்கீகாரம்

குவாடிமாலாவில் ஏற்பட்டிருக்கும் புதிய இராணுவ சர்க்காரை ஸ்பெயின் அங்கீகரிப்பதென முடிவு செய்தது. அத்துடன் இராஜீயத் தொடர்பு கொள்ள தூதுவரையும் அனுப்புமென்று தெரிகிறது. தற்போது பதவியிலிருந்து விலகிய டாக்டர் ஜீவன் பதவி யேற்றவுடன், ஸ்பெயின் குவாடிமாலாவுடன் 1945 முதல் கொண்டிருந்த இராஜீயத் தொடர்புகளை அறுத்துக்கொண்டது.

## சென்னை நகரசபை உறுப்பினருக்கு ரூ. 201 அபராதம்

### உமாபதிக்கு நீதிமன்றம் தந்த சன்மானம்!

சென்னை, ஜூலை 10— ஒரு ஆசிரியரை அடித்ததாக எழும்பூர் டிவிஷன் கவுன்சிலர் திரு. ஜி உமாபதிக்கு பிரதம மாஜிஸ்திரேட் திரு. பி. ராமகிருஷ்ணன் இன்று ரூ 201 அபராதமும், கட்டத் தவறினால், 2 வாரம் சாதாரண சிறை தண்டனையும் விதித்தார்.

மாஜிஸ்திரேட் மேலும் தமது தீர்ப்பில் கூறுகையில் தெரிவித்ததாவது:—

சிறுவனை அடித்ததற்கு வாத்தியார் மீதுதான் முதலில் குற்றம் இருக்கிறது என்றாலும், வேறு வகையில் வாத்தியார் மீது எதிர் நடவடிக்கை எடுத்திருக்க முடியும். அதை விட்டுத் தவறாகவும் ஆத்திரப்பட்டும் வாத்தியாரை அடித்ததற்காக இ பி கோ 352-வது பிரிவின் கீழ் எதிரிக்கு ரூ. 201 அபராதமும் தவறினால் 2 வார சிறைத் தண்டனையும் விதிக்கிறேன் என்றார்.

### தாணு பிள்ளை மறுக்கிறார்

"திருவாங்கூர்—கொச்சி ராஜ்யத்தில் உள்ள தமிழ்ப் பகுதிகளைப் பிரிப்பது ஆதார பூர்வமற்றதாகும். மலபார் மாவட்டத்தை திரு—கொச்சியுடன் சேர்த்தால் நிர்வாக தொந்தரவுகள் ஏற்படுவதுடன், பொருளாதாரப் பிரச்சினையும் எழலாம்,"

என்று ராஜ்யப் புனரமைப்புக் குழுவினரிடம் கூறியிருப்பதாக திரு—கொச்சி முதல் அமைச்சர் பட்டம் தாணு பிள்ளை கூறினார்!

### பாரிஸ் சாகசம்!

#### புதுவை, காரைக்காலை மட்டும் வைத்துக் கொள்கிறதாம்!

பிரெஞ்சிந்திய இடங்களில் உள்ள நிலைமைகளை நேரில் கண்டறிய பிரெஞ்சு சர்க்கார் உயர் தர குழு ஒன்றை கூடிய சீக்கிரம் அனுப்புவார்கள் என்று தெரிகிறது.

பிரெஞ்சிந்தியப் பிரதேசங்களை இந்தியாவுக்கு மாற்றுவது பற்றி இந்திய சர்க்காருடன் இக்குழு பேச்சுவார்த்தைகள் நடத்துமாம்.

புதுச்சேரி, காரைக்கால் இரண்டை மட்டும் தன்னிடம் வைத்துக்கொண்டு மற்ற பகுதிகளை கௌரவமாக விட்டுக் கொடுப்பது நல்லது என்று பிரெஞ்சு சர்க்கார் கருதுகிறதாம்!

மிலானில் கூடிய ஐரோப்பிய சோஷலிஸ்ட்கள் பிரான்சும் இத்தாலியும் ஐரோப்பிய பாதுகாப்பு ஒப்பந்தத்தில் சேர வேண்டுமென்றும், இங்கிலாந்து மேற்கு நாடுகள் கம்யூனிஸ்ட்கள் வசமாகி விடும் என்று தீர்மானித்தார்கள்.

### திருவொற்றியூர் பஞ்சாயத்து போர்டு

திருவொற்றியூர் பஞ்சாயத்தின் அவசரக் கூட்டம் 2-7-54 வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்கு தலைவர் எம். ராமானுஜம் தலைமையில் நடைபெற்றது. அது சமயம், பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரி எஸ். பி. மணவாள நாயுடு அவர்கள் திருவொற்றியூர் பஞ்சாயத்து நிர்வாகப் பொறுப்பிலிருந்து மாற்றப்பட வேண்டும் என்று சர்க்காரை கேட்டுக் கொள்ளும் தீர்மானம் உப தலைவர் திரு பி. சுப்பிரமணியம் பிரேரேபிக்க எம். கனகசபாபதி அவர்கள் ஆதரிக்க தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது கூட்டத்தில் மொத்தம் 13 அங்கத்தினர்கள் கலந்து கொண்டனர். —ந. தி.

### வள்ளுவர் படிப்பகம்

உடுமலைக்கு அண்மையில் உள்ள கண்ணமநாயக்கனூர் கிராமத்தில் வள்ளுவர் படிப்பகம் நிறுவி, உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர்: பழனிசாமி; செயலாளர்: க. நடராசு; துணைச் செயலாளர்: இராமசாமி; பொருளாளர்: மாரியப்பன்; செயற்குழு உறுப்பினர்களாக 11பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். படிப்பகத்தின் அவசியம் பற்றி, தோழர்கள் நா. துரை. நி விசுவநாதன், கோவிந்தசாமி, வேலாயுதன், வெ. காளியப்பன் பேசினர்.

REGD. NO. M. 6311

## பழம் விழுந்தாலும் சரி, எறியும் கல்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்று ம. பொ. சி.—யாரின் நிலையே, 'நெய்க்குதொன்னை ஆதாரமா அல்லது தொன்னைக்கு நெய் ஆதாரமா?' என்பது போன்று, 'ம. பொ. சி. காங்கிரசுக்கு ஆதாரமா? அல்லது காங்கிரஸ், ம. பொ. சி—க்கு ஆதாரமா?' என்று தெளிவில்லாததாக இருக்கிறது!

அந்த நிலையில், அவர் தமிழர்களிடையேயும் — ஆந்திரர்களிடையேயும் இருக்கவரும் நல்லுணர்வை, பகை உணர்வாக்கும் முறையில் 'பிரகாசத்துடன் போர்' என்று சொல்வது பொறுப்புள்ள செய்கை அல்ல!

போர் மூட்டுவதற்கு முன் பொறுப்பு உணரப்பட வேண்டும்.

எங்களால் போராட முடியாதா என்ன? எங்களுக்குள் போர்த் திறனும், போர்க் குணமும் அறியாதவர் இல்லை!

எங்கள் போராட்ட பரம்பரை மகத்தான காரியங்களைச் சாதிக்கும் வல்லமை உடையது என்பதும் காட்டிய ஒன்று!

ஆனால் எங்களுக்குப் பொறுப்பு அதிகம்; லட்சம் உறுப்பினர்களையும், ஆயிரம் கிளைகளையும் கொண்ட தி. மு. கழகம், போராட்டத்திற்கு அஞ்சியது இல்லை என்பதும் உணரப்பட வேண்டியதாகும்.

எங்களுடைய போராட்டம் எல்லாம், டில்லி ஆதிபத்தியத்தை எதிர்த்துத்தான்! பிறகு, தேவைப்பட்டால், பிரகாசத்துடன்—அதற்குப் பிறகே, காமராசருடன்—இந்தப் பிரச்சினை சம்பந்தப்பட்ட மட்டில்!

### ஒரு ஆண்டு அவகாசம்

எங்களுக்கு இந்தப் பிரச்சினை குறித்து முடிவுக்கு வர ஒரு வருடகாலம் அவகாசம் தாருங்கள். எல்லைக் கமிஷனை வரச் செய்யவோ, எல்லைக் கமிஷனின் முடிவுகள் சரியானதாக இல்லாவிடில் அதை எதிர்த்து நடவடிக்கை மேற்கொள்ளவோ, தீர்க்கமாக ஆலோசனை செய்து ஒரு நல்ல முடிவுக்கு வர அவகாசம் வேண்டாமா?

### கல்லெறி கோலம்!

ம. பொ. சி.-யின் போக்கெல்லாம் வேலி ஓரத்தில் நின்று கொண்டு மாமரத்தின் மீது கல்லெறிவோம், பழம் விழுந்தால் அதுவரை லாபம்; விழாவிட்டால், எறிகிற கல், யார் தலையிலாவது விழுந்து விட்டுப் போகட்டும்," என்று எண்ணும் நிலையில்தான் இருக்கிறது.

நமது நிலை அப்படி அல்ல —மிகவும் பொறுப்பு வாய்ந்தது—நம் கழகம்.

### ரத்தக்களறிதான் பலன்!

இங்கு பிரகாசத்தை எதிர்த்துப் போரிட்டால், நேரு, நம்மீது அடக்குமுறைகளை அள்ளி வீச மாமா மறைமுகமாகத் தூண்டுவோர் பிரகாசத்தை! ஆந்திரர்களும் — தமிழர்களும் அடித்துக் கொள்வதினால் ரத்தக்களறிதான் ஏற்படுமே தவிர

வேறென்ன ஏற்பட்டு விடும்?

### தியாகம் வீணாகக் கூடாது!

திரு—கொச்சியில் போரில் ஈடுபட்டவர்களை விடுவிக்கக்கூட முடியவில்லை சென்னை அரசாங்கத்தால்; ஆகவேதான் நாம் சொல்கிறோம்—டெல்லியை எதிர்த்து நாம் போர் புரிய வேண்டும்; அந்த ஏகாதிபத்தியவாதிகளை எதிர்க்க நமக்குத் துணிவு இருக்க வேண்டும்; நாம் செய்கிற தியாகம், நாம் எதற்காகத் தியாகத் தழும்பேற்கிறோமோ, அந்த லட்சியத்தை ஈடேற்றுவதாக இருக்க வேண்டும்; தியாகம் பலன் உள்ளதாக இருக்க வேண்டும் — என்று விரும்புகிறோம்.

அதை விடுத்து பொறுப்பற்று இங்கே, தமிழர்களையும் —ஆந்திரர்களையும் பகைத்துக் கொள்ளச் செய்து ரத்தக் களறி உண்டுபண்ணினால், காமராசர் கண்ணை மூடிக் கொள்வார்; நேருவும் கண்ணை இறுகக் கட்டிக்கொள்வார்; பலன் எதுவும் ஏற்படாது.

### சிறப்பும்—சிக்கலும்!

சித்தூர் பிரச்னை சாதாரணமானதல்ல; ஒரு நல்ல போராட்டம் ஏற்படக் கூடும். அதற்கு நாம் துவேஷம் இல்லாத முறையில் ஆந்திரர்களையும் — தமிழர்களையும் கலந்து, அறவழி நின்று, பொறுப்புணர்வுடன் காரியங்கள் செய்ய வேண்டும்.

நம் மடியிலிருக்கும் சொத்தை வழியில் போகிறவன் எடுத்து இன்னொருவன் ஜேபியில் போடுவானா; பொருளை இழந்த நாம், பொருளை நம் மடியிலிருந்து எடுத்தவனைத்தான் கேட்க வேண்டுமேதவிர மற்றவனை அல்ல; மற்றவனைக் கேட்டால் அவன் என்ன சொல்லுவான்?— "நான் என்ன உன்னிடம் இருந்து எடுத்தேனா? அல்லது திருடினேனா? இல்லையே! உன்னிடமிருந்து எவன் பொருளை எடுத்தானோ அவனைப் போய்க் கேள்"—என்பான்.

ஆகவே, பொருளை நம் மடியிலிருந்து எடுத்தவனைத் தட்டிக் கேட்க வேண்டுமே அல்லாது இடை பொருளை வைத்திருப்பவனை அல்ல!

எனவே, இந்த சித்தூர் பிரச்னையில் முடிவு காண தோழர் என். வி. நடராசன் தலைமையில் நிறுவப்பட்ட குழு, உங்களை எல்லாம் சந்தித்து, அமைதியான முறையில், நேர்மையான உணர்வுடன் இந்தப் பிரச்னைக்கு முடிவு காண தி. மு. கழகம் முயலும்."

### அவரிடமிருந்து — இவருக்கு!

ஜூலை 15-ம் தேதி முதல் சமுதாய நல திட்டங்கள், தேசிய விஸ்தரிப்பு சேவை ஆகிய இரண்டையும் சென்னை விவசாய மந்திரி பக்தவத்சலத்திடமிருந்து முதல் மந்திரி காமராசர் எடுத்துக் கொள்கிறாராம்.

# 'தினத் தந்தி'யின் தகிடுதத்தம்!

## ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய் கூறும் இழி செயல்!

(நமது விசேஷ நிருபர்)

பட்டுக்கோட்டை வட்டத்தில் பேராவூரணியை அடுத்துள்ள குக்கிராமமான குருவிக்கரம்பையில், புதிதாகக் கட்டப்பட்டுள்ள பிள்ளையார் கோயில் ஒன்றைத் திறந்து வைப்பதற்காக, அக்கோயில் நிர்வாகிகள் அண்ணாதுரை அவர்களுக்கு அழைப்பு அனுப்பினதாக, சொந்தத்தில் இட்டுக்கட்டிய செய்தியை, இருபது நாட்களுக்கு முன், சென்னை 'தினத்தந்தி' வெளியிட்டது.

அச்செய்தி, 'தினத் தந்தி' இதழின் சொந்தத் தயாரிப்பு என்றும், அங்கு பழமையானதோ அல்லது புதிதானதோ கட்டப்பட்ட பிள்ளையார் கோயிலே கிடையாது என்றும், கோயில் நிர்வாகிகள் என எவரும் கிடையாது என்றும், அண்ணாதுரையை அழைக்கும் கருத்துக்கு கூட்டத்தில் இருந்த காங்கிரஸ் கட்சியினர் சிலர் ஒப்பாமல் வெளியேறினர் என்றும், 'தினத் தந்தி' குறிப்பிட்டிருந்தது, துளியும் உண்மை கலவாத அபாண்டம் என்றும், குருவிக்கரம்பை நிருபர் அனுப்பிய மறுப்புச் செய்தியை 'நம் நாடு' வெளியிட்டிருந்தது.

'நம் நாடு' நிருபர் செய்தியில், குருவிக்கரம்பையில் உள்ள காங்கிரஸ் கட்சி முக்கியஸ்தரான வயிரவன் தேவர், 'தினத் தந்தி' செய்தி பற்றி கூறிய கருத்தும் தரப்பட்டிருந்தது.

'நம் நாடு' தந்த மறுப்புச் செய்தியை மறைக்கும் முறையில், மீண்டும் 'தினத் தந்தி', 'புதிய பிள்ளையார் கோயிலைத் திறக்க அண்ணாதுரைக்கு அழைப்பு', என்ற முன்னர் வெளியிட்டதற்கு மாறாக, 'பிள்ளையார் கோயிலுக்கு 'அஸ்திவாரக் கல் நாட்ட அண்ணாதுரைக்கு அழைப்பு' அனுப்பப்பட்டது எனும் செய்தியை வெளியிட்டது.

அச்செய்தியை மெய்ப்பித்துக் காட்டும் நிலைப்போடு 'நா. இராமசாமித் தேவர்' என்ற ஒரு நபரை படைத்து, அவருக்கு 'கோயில் நிர்வாகிகளில் ஒருவர்' என்ற தகுதியையும் புகுத்தி, அவர் பெயரால் ஒரு அறிக்கை ஏடும் உருவாக்கி, அப்பொய்ப்பேட்டைப் புகைப்படமாக்கி, 11—7—54-ந் தேதிய இதழில் வெளியிட்டிருந்தது.

முன்னர் கூறியதற்கு முழுதிலும் மாறாக, பின்னர் 'தினத் தந்தி' வெளியிட்டச் செய்தியையும், முதல் முதலாக 'தினத் தந்தி'யில் காணப்பட்ட செய்திக்கு 'நம் நாடு' வெளியிட்ட மறுப்புச் செய்தியையும், 12—7—54-ல், 'நம் நாடு' ஒருங்கே திரட்டித் தந்து, 'தினத் தந்தி'யின் கள்ளத்தனத்தை அம்பலப்படுத்தியது.

அதற்குப் பிறகு, குருவிக்கரம்பை நிருபரிடமிருந்து, அவ்வூரில் உள்ள முக்கியக் குடிமக்கள் சிலரின் கையொப்பமிட்ட அறிக்கை ஒன்றும், காங்கிரஸ் முக்கியஸ்தரான வயிரவன் தேவர் அவர்களின் கையொப்பமிட்ட அறிக்கை ஒன்றும், 'நம் நாடு'விற்கு கிடைத்திருக்கிறது. அவ்விரண்டு அறிக்கைகளும், 'தினத் தந்தி'யின் பித்தலாட்டத்தை வெட்ட வெளிச்சமாகக் காட்டுவதாக உள்ளன.

குருவிக்கரம்பையில், பிள்ளையார் கோயில் கட்டும் முயற்சியில் எவரும் ஈடுபட்டிலர் என்றும், அதற்காக பொதுமக்களிடம் நிதி திரட்டியதும் கிடையாது என்றும், கோயில் நிர்வாகிகள் என எவரும் இருக்கவில்லை என்றும், நிர்வாகிகளில் ஒருவரென 'தினத் தந்தி'யால் படைக்கப்பட்டுள்ள நா. ராமசாமித் தேவர் என்ற பெயருடைய நபரே குருவிக்கரம்பையில் கிடையாது என்றும், 'நமது நிருபர்' 'நம் நாடு' இதழுக்குத் தகவல் தந்துள்ளார்.

அவ்விரண்டு அறிக்கைகளில் ஒன்றான, வயிரவன் தேவர் அவர்களால் கையெழுத்திடப்பட்டுள்ள அறிக்கையை, அப்படியே புகைப்படமாக்கி, நாளை அல்லது மறுதினம் 'நம் நாடு' வெளியிடும். அத்துடன், குருவிக்கரம்பை முக்கியஸ்தர்கள் கையொப்பமிட்டுள்ள அறிக்கையின் முழு விவரமும் 'நம் நாடு' தாங்கிவரும்.

### தொழிலாளர்கள் சம்பள மறுப்பு நீடிப்பு!

சென்னை, ஜூலை 14—

சர்க்கார் கைத்தொழில் இன்ஜினிரிங் தொழிலாளர்கள் சென்ற மே மாத சம்பளத்தை இன்று வரையில் வாங்காமலிருக்கும் நிலையில் சர்க்கார் தலையிட்டு தக்கன செய்ய காலதாமதம் ஏற்பட்டதாலும், தொழிலாளர்கள் கஷ்ட நிலைக்குள்ளாகிறதாலும் சங்க நிர்வாகக் கமிட்டி 9—7—54-ல் கூடி, பின் வருமாறு தீர்மானித்தது:—

சர்க்காருக்கும், தொழில் மந்திரிக்கும் சம்பளம் வாங்காத விஷயத்தை நன்கு தெரிவித்து உடனடியாக பரிகாரம் கிடைக்காததைப் பற்றி வருந்துவதுடன் மே மாத சம்பளத்தைப் பிடித்தமில்லாமலும், காலதாமதமின்றியும், உடனடியாகக் கொடுக்க உத்திரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறது.

---

மதுரை மீனாட்சியம்மன் கோயிலிலும், திருப்பரங்குன்றம் கோயிலிலும் ஒரே நாளில் 2 கட்டணத்தில், மதச் சடங்கு களின்றியும், ஆடம்பரங்களின்றியும் 200-க்கு மேற்பட்ட திருமணங்கள் நடைபெற்றதாம்!

### சென்னிமலையில்

16—7—54 மாலை 7 மணிக்கு

சி. என். அண்ணாதுரை பேசுவார்.

இடம்: குமரன் சதுக்கத்தில்

### நம் தாய் மொழி...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

என் அனைவரும் நமக்குக் கற்பித்திருப்பது ஒரு கடவுள் வழிபாடும் ஒருமை உணர்ச்சியும் ஆகும். அகநூல் கண்ட கண்ட கடவுளரை வணங்காமல், அவரவர் விருப்பத்திற்கு உகந்ததாவதொரு கடவுளை அவரவர் விருப்பத்திற்கேற்ப அமைத்துக் கொண்டு கருதிக் கொண்டு ஒருவர் வழிபடுவார் எனின் அவரைக் குற்றம் கூறும் அளவு நாம் செல்லுதல் கூடாது.

உண்மையிலே, புறவேடம் கொள்ளாமலும் கோயில் செல்லாமலும், உள்ளத்திலேயும் வீட்டிலேயும் கடவுளை வழிபாடு உய்யக் கூடிய பெருமை உடைய தமிழ் சிசியர் பலர் இருக்கிறார்கள் (பின்னும் வரும்)

### கழகக் கூட்டங்கள்

★

#### சென்னை

கான்ரான்ஸ்மித் மைதானத்தில்

15—7—54 மாலை 6 மணிக்கு

தலைவர்: கே. ஏ. மதியழகன்

பேசுவோர்:

இரா. நெடுஞ்செழியன்

அரங்கண்ணல்

மாலை 3 மணிக்கு, இராயபுரம் 'அறிவகத்'திலிருந்து, மாபெரும் ஊர்வலம் சென்னை மாவட்டத் துணைச் செயலாளர் வி. ராமசாமி தலைமையில் புறப்படும்.

★

#### கோவை

சிதம்பரம் பூங்கா

15—7—54 மாலை 6 மணிக்கு

பேசுவோர்:

கோபி ஜி. என். ராஜு

எம். ஜி. இராமச்சந்திரன்

★

#### சேலம்

அம்மாபேட்டை மாரியம்மன் கோவில் மைதானத்தில்

15—7—54 மாலை 6½ மணிக்கு

தலைவர்: பி. எம். கோபல்

பேசுவோர்:

ஈ. ஆர். கிருஷ்ணன்

சிற்பளி ஏ. சுப்ரமணியம்

கே. ஏ. நடராசன்

கே. எஸ். மணி

கே. பி. நஞ்சப்பன்

கே. ஏ. வெங்கடாசலம்

★

#### அருப்புக்கோட்டை

தியாகராஜ ஹாலின் முன்பாக

15—7—54 இரவு 7½ மணிக்கு

பேசுபவர்:

எம். எஸ். இராமசாமி

★

#### நாகை

தி. மு. கழகக் கட்டிடத்தில்

15—7—54 இரவு 7 மணிக்கு

தலைவர்: பாண்டியன்

பேசுபவர்:

வி. சதாசிவம்

★

#### சோழன்பேட்டை

(மாயூரம் வட்டம்)

பவுண்டேக்கு அருகில்

16—7—54 வெள்ளி மாலை

தலைவர்: கே. ராமையா

பேசுவோர்:

என். வி. நடராசன்

என். சிட்டப்பா

கே. எஸ். சௌந்தரராசன்

### மும்முனைப் போராட்ட முழக்க நாள்

15—7—54 மாலை 6 மணிக்கு சென்னை 21-வது வட்ட தி. மு. கழகக் கட்டிடத்தில் தோழர் பு. வே. பார்த்திபன் தலைமையில் கொண்டாடப்படும்.

இரவு 8 மணிக்கு கழக நிர்வாகிகள் கூட்டம் நடைபெறும். வரவு-செலவு கணக்கு பரிசீலிக்கப்படும்.

### முகவரி

கே. வி. கே. சாமி,

3-வது மைல்,

புதுக்குடி,

தூத்துக்குடி

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்கள், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, லட்சுமி நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை எம். ஏ.